07.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

(A6 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.25 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடரச்சி**

கே: நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்?

ப: நான் M.Sc., M.Phil., விலங்கியல் படித்துள்ளேன்.

கே: நீங்கள் எவ்வளவு நாட்கள் காவல் துறையில் அனுபவம் பெற்றுள்ளீர்கள்?

ப: 28 ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ளேன்.

கே: 26.06.2015 அன்று மாலை 08.30 மணியளவில் ஆம்பூர் காவல் நிலையத்தில் இருந்தேன் என்று உங்களுடைய முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்கள். தங்களின் உரிய காவல் நிலையம் எது எதற்காக ஆம்பூர் காவல் நிலையம் வந்தீர்கள்?

ப: கடந்த 26.06.2015ம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு என்னுடைய பணி வேப்பங்குப்பம் காவல் நிலைய எல்லையில் ரோந்து பணியில் இருந்தபோது ஆம்பூர் காவல் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் வான்செய்தி (VHF) மூலம் ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் பாதுகாப்பு பணிக்கு வரச்சொன்னதின் பேரில் நான் அன்றைய தினம் இரவு சுமார் 09.00 மணிக்கு ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் சென்றேன்.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் எதிரே முஸ்லீம் மக்கள் ஒன்றுக்கூடியிருந்தார்கள் என்று உங்களுடைய முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்கள். அவ்வாறு முஸ்லீம் மக்கள் கூடியிருந்ததற்கான காரணம் என்ன?

ப: ஆம்பூர் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஷமீல் பாஷா என்பவர் காவல் துறையினர் அழைத்துச்சென்று அடித்ததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறந்துவிட்டார் என்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூடியிருந்தனர்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நிகழ்ந்ததாக சொல்லப்படும் நிகழ்விற்கு ஆம்பூர் காவல் நிலையத்திற்கு முன் கூட வேண்டிய அவசியம் என்ன?

ப: இறந்துபோன ஷமீல் பாஷா என்பவர் சொந்த ஊர் ஆம்பூர் என்பதால் கூடியிருந்தார்கள்.

கே: ஷமீல் பாஷா ஆம்பூரை சேர்ந்தவர் என்பதற்கான ஆவணம் இந்த நீதிமன்றத்தில் உள்ளதா அல்லது உங்களுடைய கோப்பில் உள்ளதா அதை எடுத்துக்காட்டுங்கள்?

ப: ஷமீல் பாஷா ஆம்பூரைச்சேர்ந்தவர் என்பதற்கு ஆவணம் எதுவும் என்னிடம் விசாரணையின்போது யாரும் சமர்ப்பிக்கவில்லை.

கே: ஷமீல் பாஷா எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று கேட்டு ஏதாவது ஒரு ஆவணத்தில் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை. அவருடைய உறவினர்கள் ஆம்பூரைச்சேர்ந்தவர்கள்.

கே: நீங்கள் போய் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பொறுப்பேற்கும்படி ஆணையிட்டது யார்?

ப: ஆம்பூர் காவல் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர்.

கே: உங்களுடைய மாறுதல் அல்லது பொறுப்பேற்கும்படி கொடுத்த ஆணையின் நகலை காட்டுங்கள்?

ப: வாய்மொழியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கே: வாய்மொழி உத்தரவு கொடுத்ததாக சொல்லும் நீங்கள் அதன்பின் ஏதேனும் எழுத்து மூலமான ஆணை பெற்றீர்களா?

ப: இல்லை. பதட்டமான சூழ்நிலையில் அந்த வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கே: பின்னிட்டு ஏற்புடைப்பு ஏதேனும் செய்யப்பட்டதா?

ப: அவ்வாறு உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டதா என்று தெரியவில்லை.

கே: உங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தினுடைய பொறுப்பேற்றுக்கொண்டதாக கடிதம் ஏதேனும் எழுதினீர்களா?

ப: தனியாக ஏதும் கொடுக்கவில்லை. VHF மூலமாக தகவல் கொடுத்தேன்.

கே: VHF மூலமாக செய்தி கொடுத்தாக எந்த ஆவணத்தில் பதிவு செய்துள்ளீர்கள்?

ப: இல்லை.

கே: தாங்கள் 26.06.2015 இரவு 10.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பை ஏற்றுக்கொண்டதாக பதிவு உள்ளதா என்று ஜிடியை பார்த்து சொல்லுங்கள் ?

ப: அன்றைய தின பொதுநாட்குறிப்பேட்டில் இரவு 10.00 மணிக்கு நான் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக நான் பொறுப்பேற்றுக்கொண்டேன் என்று அதில் நான் எழுதி கையெழுத்திட்டுள்ளேன்.

கே: மேலே கூறியவாறு எழுதியதற்கு உங்களுக்கு எழுத்து மூலமான ஆணை ஏதேனும் வழங்கப்படடதா?

ப: அப்போது எழுத்து மூலமாக ஆர்டர் எதுவும் கொடுக்கவில்லை. வாய்மொழியாக டிஎஸ்பி அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்.

கே: வாய்மொழி உத்தரவினை Ratify செய்து ஏதேனும் ஆணை தங்களிடம் அல்லது இந்த நீதிமன்றத்தில் இருக்கிறதா?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை 158/2015 என்ற ஆவணத்தை யார் எழுதியது?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி அல்லது எந்த காவலர் என்று நினைவில்லை.

கே: 26.06.2015 பொதுநாட்குறிப்பில் பக்கம் 320ல் இறுதி மூன்று வரிகள் எழுதியுள்ள இடத்தில் 00.15 என்று எழுதி அடிக்கோடிட்டு அதில் 27.06.2015 என எழுதிவிட்டு பக்கம் 321ல் 26.06.2015 வெள்ளிக்கிழமை என தொடங்கப்பட்டுள்ளது என்றால்?

ப: எழுதியது உண்மை. ஆனால் முதல் தகவல் அறிக்கையை நள்ளிரவு 00.15 மணிக்கு நான் பதிந்ததால் அந்த நேரத்தை குறிப்பதற்காக அதற்கு கீழே 26.06.2015 என்று முதல் தகவல் அறிக்கை பதிந்த தேதியை சிறப்பாக குறிப்பிட்டுள்ளேன். எங்கள் காவல் நிலைய வழக்கப்படி காலை 07.00 மணி முதல் மறுநாள் காலை 06.59 மணி வரை ஒரு தொடர் நாள் ஆகும்.

கே: Police Standing Order படி எழுதாமல் தங்களின் குற்றத்தை மறைப்பதற்காக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.1 ல் புகார்தாரரால் தேதியிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: இடமாவது குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.1 யாருக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது என்றால்?

ப: உயர்திரு காவல் துணைக்கண்காணிப்பாளர், நகர காவல் நிலையம் ஆம்பூர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: அ.த.சா.ஆ.1 ல் டிஎஸ்பி ஆம்பூர் அவர்களின் அலுவலக முத்திரை ஏதேனும் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: ஆம்பூர் டிஎஸ்பி அவர்கள் தங்களுக்கு பரிந்துரை செய்ததாகவோ தங்களிடம் கொடுத்ததாகவோ அ.த.சா.ஆ.1 ல் குறிப்புகள் ஏதாவது உள்ளனவா என்றால்?

ப: இல்லை. ஆனால் ஆம்பூர் டிஎஸ்பியின் வாய்மொழி உத்தரவுப்படி பொறுப்பேற்றேன்.

கே: அ.த.சா.ஆ.1 ல் ஆம்பூர் டிஎஸ்பியால் வாய்மொழி உத்தரவு தந்தேன் என்று ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா என்றால்?

ப: இல்லை.

கே: மேலே கேட்ட மூன்று கேள்விகளுக்கும் தாங்கள் "இல்லை" என்று பதில் அளித்துள்ளதால் இந்த புகாரினை (அ.த.சா.ஆ.1)ஐ வேறு எவருடைய தூண்டுதலுக்கு ஆளாகி பெற்றிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அப்படியானால் தங்களுக்கு அ.த.சா.ஆ.1 புகார் எப்படி கிடைத்தது என்பது குறித்து தாங்கள் FIR ல் எழுதியதை தவிற வேறு

ஆவணம் அல்லது குறிப்புகள் உள்ளனவா என்றால்?

ப: வழக்கின் புகார்தாரர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று வழக்கு பதிவு செய்தேன்.

கே: ஆம்பூர் டிஎஸ்பிக்கு முகவரியிட்ட புகாரினை தாங்கள் பெறுவதற்கான அதிகாரத்தை யார் அளித்தது?

ப: ஆம்பூர் காவல் துணைக்கண்காணிப்பாளர் வாய்மொழி உத்தரவின்படி மேற்படி முதல் தகவல் அறிக்கை புகாரை பெற்று பதிவு செய்தேன். மேலும் புகாரில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஷமீல் பாஷாவை 15.06.2015 தேதி முதல் 19.06.2015 வரை கொடூரமாக அடித்து ஷு காலால் மர்ம உறுப்பில் அடித்ததால் நடவடிக்கை எடுக்கும்படி புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். யாருடைய தூண்டுதலும் கிடையாது. டிஎஸ்பியின் வாய்மொழி உத்தரவின்படி பதிவு செய்தேன்.

கே: ஆம்பூர் டிஎஸ்பி வாய்மொழி உத்தரவு கொடுத்தார் என்பதற்கு எந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்கள்?

ப: வாய்மொழி உத்தரவின்படி முதல் தகவல் அறிக்கை பதிந்தேன். ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

கே: 15.06.2015 ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததாக எந்த ஆவணத்தை பார்த்து உறுதி செய்தீர்கள் என்றால்?

ப: புகார்தார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில்.

கே: புகாரை பெற்ற பிறகு புகாரில் உள்ள தகவலை எந்த ஆவணத்தை வைத்து 15.06.2015 என்பதை உறுதி செய்தீர்கள்?

ப: புகாரைத்தவிற ஆவணங்கள் எதுவும் இல்லை.

கே: 15.06.2015 பொதுநாட்குறிப்பேட்டில் ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டதாக பதிவுகள் ஏதேனும் உள்ளதா என்று பார்த்து சொல்லவும்?

ப: பதிவுகள் ஏதுமில்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு முன்பாக ஷமீல் பாஷா நிலையம் அழைத்துவரப்பட்டதாக பதிவுகள் ஏதும் உள்ளனவா ?

ப: பதிவுகள் ஏதுமில்லை.

கே: 26.06.2015 இரவு தாங்கள் பொறுப்பேற்றதாக பதிவு செய்தற்கு உங்களது உயர் அதிகாரியான டிஐஜி, ஐஜி, எஸ்பி மற்றும் டிஎஸ்பி ஆகிய எவரிடமிருந்தும் எழுத்து மூலமான ஆணை இல்லாததால் தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய வழக்கினை கையாளுவதற்கான அதிகாரமற்ற அதிகாரி என்றால்?

ப: சரியல்ல.

கே: அதுபோலவே தங்களால் எழுதப்பட்டதாக சொல்லப்படும் அ.த.சா.ஆ.21ல் பக்கம் எண் 320 மற்றும் 321 ஆகிய பக்கங்களில் எழுதியிருப்பது சட்டவிரோதமானது PSO 706 –ல் குறிப்பிட்டுள்ளது போல் பொதுநாட்குறிப்பில் எந்தவித இடைவேளி இல்லாமல் எழுதபட்டிருக்க வேண்டும் ஆனால் இடைவேளியை பார்த்து தாங்கள் எழுதி தங்களுடைய அதிகாரமில்லாத செயலை அதிகாரம் உள்ளதாக காட்டுவதற்கு தவறாக பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: ஷமீல் பாஷாவின் மரணம் குறித்து தங்களால் எத்தனை புகார்கள்

பெறப்பட்டன?

ப: முதலில் ஒரு மனு பெறப்பட்டது. அதன் பிறகு ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரால் பெறப்பட்ட இரண்டு மனுக்கள் பெறப்பட்டன.

கே: முதல் மனுவினுடைய தேதி என்ன?

ப: 27.06.2015 ம் தேதி 00.15 மணி.

கே: இரண்டாவது புகாரினுடைய தேதி என்ன?

ப: 27.06.2015 ம் தேதி மாலை 16.00 மணி கான்ஸ்டபில் மூலமாக தபால் வந்தது.

கே: மூன்றாவது புகாரினுடைய தேதி என்ன?

ப: 26.06.2015.

கே: 26.06.2015 தேதியிட்ட புகார் முதல் புகாரா? அல்லது தேதியே இடப்படாமல் தங்களால் பெறப்பட்டதாக சொல்லப்படும் புகார் முதல் புகாரா?

ப: K.M.அலி அக்பர் தேதி குறிப்பிடாமல் கொடுத்த புகார்தான் முதல் புகார்.

கே: அலி அக்பரால் 26.06.2015 அளிக்கப்பட்ட புகாரிற்கு பின்னால் 26.06.2015 நள்ளிரவில் அதாவது 00.15 மணிக்கு பெறப்பட்டதாக சொல்லப்படும் புகாரினை ஒப்பிட்டு எது முதல் புகார் என்று சொல்லுங்கள்?

ப: நாள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஆஜரில் இருந்தபோது தேதி குறிப்பிடாமல் கொடுக்கப்பட்ட புகார்தான் முதல் புகார். அதை நான் பதிவு செய்தேன். 27.06.2015 அன்று ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் அலி அக்பர் மற்றும் கௌஷ் பாஷா கொடுத்த புகாரை மாலையில்தான் எனக்கு அனுப்பினார்.

கே: 26.06.2015 உயர்திரு காவல் ஆய்வாளர் நகர காவல் நிலையம் என்று உள்ளதில் நிலையத்தினுடைய முத்திரை உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அந்த ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் குறிப்பாக 26.06.2015 தேதியிட்ட புகாரினை தங்களுக்கு கொடுத்ததாக சொல்லும் ஆய்வாளரின் கையொப்பம் அல்லது Proceedings ஏதேனும் எ.த.சா.ஆ.1 ல் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.1 ல் முகவரியிடபட்டுள்ள ஆம்பூர் டிஎஸ்பி அவர்களுடைய கையெழுத்தோ அல்லது Proceedings—ஓ அந்த புகாரினை தங்களுக்கு அனுப்பியதாக ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் திரு.சரவணன் அவர்கள் 26.06.2015 அலி அக்பரிடம் புகார் பெற்றதாகவும் அதனை தங்களுக்கு தபால் மூலம் அனுப்பியதாகவும் ஏதேனும் ஆவணங்கள் உள்ளனவா?

ப: இல்லை.

கே: ஒரு காவல் நிலையத்தில் குறிப்பாக நகர காவல் நிலையத்தில் அந்த ஆய்வாளர் 26.06.2015 புகாரை பெற்றிருக்கும் நிலையில் அவர் என்ன செய்திருக்க வேண்டும்?

ப: முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க வேண்டும்.

கே: அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா?

ப: இல்லை.

கே: 26.06.2015 ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் அலி அக்பரிடம் புகாரினை பெற்றதாக அந்த புகாரின் கீழ் ஏதேனும் எழுதி கையெழுத்திட்டுள்ளாரா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்திலிருந்து ஒரு புகாரை பெற்று அதனை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்க அனுப்பும்போது ஒரு Proceedings போட்டு அதற்கு ஒரு Despatch எண் கொடுத்து அனுப்பியிருக்க வேண்டும் எனறால்?

ப: சரிதான். அவசர காலத்தில் அவ்வாறு செய்ய முடியாது.

கே: அவசர காலத்தில் அவ்வாறு Proceedings போட முடியாது என்றும் போடக்கூடாது என்றும் ஏதேனும் PSO ல் குறிப்பிடப்பட்டுள்ளதா?

ப: இல்லை.

கே: அவ்வாறு PSO குறிப்பிடப்படாததால் தாங்கள் வேண்டுமென்றே இரண்டு புகார்களை அலி அக்பரிடம் பெற்று ஒன்றை மறைத்துவிட்டு ஒன்றை FIR பதிவு செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரால் பெறப்பட்ட புகாருக்கு அந்த ஆய்வாளரால் ஏன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பது குறித்து ஏதேனும் ஆவணம் இந்த நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறீர்களா?

ப: ஆவணங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

கே: எ.த.சா.ஆ.1ல் நகர காவல் ஆய்வாளரின் காவல் நிலையத்தின் முத்திரையோ அல்லது அவரின் கையொப்பமோ அல்லது ஆம்பூர் காவல் நிலைய எந்தவித Proceedings–ம் இல்லாதால் இந்த 26.06.2015 புகாரை பெற்று அதை மறைத்துவிட்டு புதிதாக

தேதியிடப்படாத புகாரினை வாங்கி FIR பதிவு செய்யப்பட்டிருப்பது சட்டவிரோதம் என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 தங்களால் பெறப்பட்ட அலி அக்பரின் புகாரில் குற்றவாளிகளினுடைய பெயர்கள் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா?

ப: எவருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை.

கே: 26.06.2015 அலி அக்பரால் கொடுக்கப்பட்ட புகாரில் எதிரிகளினுடைய பெயர் இல்லை என்பதால் தேதியிடப்படாமல் அதே அலி அக்பரிடமிருந்து ஒரு புகாரினை எழுதி கொண்டு வரச்சொல்லி அதில் எதிரிகளினுடைய பெயரை குறிப்பிட்டு எழுதும்படி அறிவுரை சொல்லி அதனை பெற்று அதில் FIR பதிவு செய்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.09 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.07 17:40:53 +0530